# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

## பிறப்பிப்பவர்: திரு.சே.மணிவண்ணன். எம்ஏபிஎட்

ந.க.எண் 8492/அ1/ 2021 நாள். 0 /11/2021

---

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை - சிவகங்கை மாவட்டம் – அளவிடங்கான், அரசு உயர்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் – திரு.ச.கருப்பசாமிபாண்டியன் என்பாருக்கு 21/09/2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை: 1) அரசாணை எண்.101 பள்ளிக்கல்வித்துறை (வரவு செலவு -1) நாள்.18/05/2018.

2) சிவகங்கை மாவட்டக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.4018/அ1/2021 நாள்.23/11/2021.

*** *** ***

பார்வை (2)-இல் காணும் சிவகங்கை மாவட்டக்கல்வி அலுவலரின் கடிதத்தின்படி, சிவகங்கை மாவட்டம், அளவிடங்கான். அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திரு.ச.கருப்பசாமிபாண்டியன் என்பாருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| பெயர் மற்றும் பதவி, அலுவலகம் | பிறந்த தேதி | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|
| திரு.ச.கருப்பசாமிபாண்டியன்,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>அளவிடங்கான்,<br>சிவகங்கை மாவட்டம் | 07/06/1993 | 21/09/2020<br>முற்பகல் | 21/09/2020<br>முற்பகல் |

### நிபந்தனைகள்

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இரண்டாண்டு தகுதிகாண்பருவத்தினை மூன்றாண்டு காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.
2. தகுதிகாண்பருவ காலத்திற்கு முன் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.
4. சம்மந்தப்பட்ட பணியாளர் பணியேற்ற நாளை உறுதி செய்து கொண்டு சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு- அசல் பணிப்பதிவேடு.

முதன்மைக்கல்வி அலுவலர்,
சிவகங்கை.

பெறுநர்:
திரு.ச.கருப்பசாமிபாண்டியன்,
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
அளவிடங்கான்,
சிவகங்கை மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக).

நகல்:
1. மாவட்டக்கல்வி அலுவலர்,
   சிவகங்கை.
2. தலைமையாசிரியர்,
   அரசு உயர்நிலைப்பள்ளி,
   அளவிடங்கான்,
   சிவகங்கை மாவட்டம்.